கருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களில் சத்துணவு உட்கொள்ளும் 2 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் மாணவ, மாணவிகளுக்கும் வாரம் மூன்று முறை முட்டைகள் வழங்குதல் – புரதச் சத்து மிகுந்த உணவு வகைகள் வழங்கும் கிழமைகள் மாற்றம் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி3) துறை

*அரசாணை (நிலை) எண்.69* நாள் 11.05.2007

படிக்கப்பட்டது:

1) அரசாணை (நிலை) எண்.499, பிற்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் 26.5.1989.
2) அரசாணை (நிலை) எண்.73, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 27.4.1998.
3) அரசாணை (நிலை) எண்.95, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 16.6.2004.
4) அரசுக் கடித (நிலை) எண்.50, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 6.4.2005.
5) அரசாணை (நிலை) எண்.47, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 13.5.2006.
6) அரசாணை (நிலை) எண்.50, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 19.5.2006.
7) அரசாணை (நிலை) எண்.51, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 24.5.2006.
8) அரசாணை (நிலை) எண்.60, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 24.4.2007.

-----

*ஆணை:*

படிக்கப்பட்டவை ஏழில் காணும் அரசாணையில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினமான ஜூலைத் திங்கள் 15ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று கொண்டாடப்படும் என அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அந்நாள் முதல் (15.7.2006) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களில் சத்துணவு உட்கொள்ளும் 2 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் மாணவ, மாணவிகளுக்கும் சத்துணவுடன் சேர்த்து வாரம் இரு முறை முட்டை வழங்கிட ஆணையிடப்பட்டது. இதனுடன் புரதச் சத்து மிகுந்த உணவு வகைகள் வழங்கப்படுவதால் அமைச்சரவை எடுத்த முடிவின்படி முட்டைகள் மற்றும் புரதச் சத்து மிகுந்த உணவு வகைகள் வழங்கும் கிழமைகள் குறித்து பின்வருமாறு ஆணை வெளியிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| திங்கட்கிழமை | : | வேகவைத்த ஒரு முட்டை |
| புதன்கிழமை | : | வேகவைத்த ஒரு முட்டை |
| வியாழக்கிழமை | : | 20 கிராம் வேகவைத்த கருப்புக் கொண்டைக்கடலை அல்லது 20 கிராம் வேகவைத்த பச்சைப் பயிறு |
| வெள்ளிக்கிழமை | : | 20 கிராம் வேகவைத்த உருளைக் கிழங்கு |

2. 2007-08ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.-

"கல்வி கற்கும் பருவத்தில் குழந்தைகளின் அறிவு மற்றும் உடல் வளர்ச்சிக்கு சிறந்த புரதச்சத்து அவசியம் என்பதை கருத்தில் கொண்டு, குழந்தைகளுக்கு மேலும் கூடுதல் ஊட்டச்சத்து அளிக்கும் வகையில் வரும் கல்வி வளர்ச்சி நாள் முதல் இத்திட்டத்தின்கீழ் வாரம் மூன்று முறை முட்டை வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.53 கோடி கூடுதல் செலவு ஏற்படும். 2007-08ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டத்திற்கான ரூ.165 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ".

3. மேற்கண்ட நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பைத் தொடர்ந்து பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான வரும் ஜூலைத் திங்கள் 15ஆம் நாள் முதற்கொண்டு சத்துணவுத் திட்டம் மற்றும் குழந்தைகள் மையங்களின் மூலம் பயன் பெறும் 2 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு சத்துணவுடன்

சேர்த்து வாரம் மூன்று முறை வேக வைத்த முட்டை வழங்கலாம் என்றும், மூன்று முறை முட்டை வழங்கப்பட உள்ளதால் உணவு முறையை பின்வருமாறு மாற்றியமைக்கலாம் என்றும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணை வெளியிடுகிறது.

| | | |
|---|---|---|
| திங்கட்கிழமை | : | வேகவைத்த ஒரு முட்டை |
| செவ்வாய்கிழமை | : | 20 கிராம் வேகவைத்த கருப்புக் கொண்டைக்கடலை அல்லது 20 கிராம் வேகவைத்த பச்சைப் பயிறு |
| புதன்கிழமை | : | வேகவைத்த ஒரு முட்டை |
| வியாழக்கிழமை | : | வேகவைத்த ஒரு முட்டை |
| வெள்ளிக்கிழமை | : | 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கு |

4. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், சமூகநல ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் இத்திட்டத்தினை செயல்படுத்திட விரைவான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5. குழந்தைகள் மையங்களில் பயன் பெறும் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களில் சத்துணவு உட்கொள்ளும் 5 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவ, மாணவியர்களுக்கு தரமான முட்டைகள் வழங்கும் பொருட்டு ஏற்கனவே மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்டுள்ள பிற நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

6. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு/எண்.188/இ.செ.(BK)/07 நாள் 8.5.2007 வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு செயலாளர்

பெறுநர்
திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சென்னை-113.
சமூக நல ஆணையர், சென்னை-5.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-15.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/9.
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை), சென்னை-18/9.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலர்கள்.

நகல்:
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை, சென்னை-6.
பள்ளிக் கல்வித் துறை இயக்குநர், சென்னை-6.
தொடக்கப் பள்ளி கல்வித் துறை இயக்குநர், சென்னை-6.
ஆதி திராவிடர் நலத்துறை ஆணையர், சென்னை-5.
பழங்குடியினர் நலத்துறை ஆணையர், சென்னை-5.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர், சென்னை-5.
முதன்மை வனப்பாதுகாப்பு அலுவலர், சென்னை-15.
சிறப்புப் பணி மற்றும் தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கையர், சென்னை-2.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை-10.
ஆணையாளர், அனைத்து மாநகராட்சிகள்.
நிதி (சந) துறை, சென்னை 9.
சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந7) துறை, சென்னை 9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்



37